# திறவுகோல்

2055

பங்குனி

மாத இதழ்



வெளியீடு:

மன்னையின் மைந்தர்கள் அமைப்பு.

மண்ணின் மாற்றத்தை நோக்கி

*மாற்றங்களை பிறரிடம் எதிர்பார்க்காமல் எம்மிடம் இருந்து ஆரம்பிக்க வேண்டும் என எண்ணிய பல எளிய மக்கள் ஒன்று சேர்ந்து டிசம்பர் 26, 2014ம் தேதி முகநூலில் மன்னையின் மைந்தர்கள் அமைப்பை ஆரம்பித்து இன்று 4966 முகநூல் நட்புகளுடன் தொடர்ந்து பயணிக்கிறது.*

*இணையத்தில் மட்டும் இல்லாது களத்திலும் பல செயல்களை வெற்றிகரமாக செய்து வருவது குறிப்பிடத்தக்கது.*

*குறிப்பாக நம்மாழ்வார் ஏரியை தூர்வாரி மீட்டெடுத்தனர், நம்மாழ்வார் பூங்கா, மீத்தேன் திட்ட எதிர்ப்பு போராட்டங்கள், உயர்திரு. சகாயம் (இ.ஆ.ப.) அவர்களை கொண்டு நமது வாக்கு! நமது உரிமை!! தேர்தல் கருத்தரங்கம், கருவேல மரம் அழிப்பு (மன்னார்குடி தொடர்வண்டி நிலையம் அருகில்), நெகிழி அழிப்பிற்கான விழிப்புணர், இரத்த தான முகாம், கடலூர் வெள்ள நிவாரண உதவி, பூமியை காப்போம் கருத்தரங்கம் என பல உறுப்பினர்களின் ஒத்துழைப்புடன் சிறப்பாக நடைபெற்றது. மேலும் அரிச்சபுரம் ஊராட்சி ஒன்றிய நடுநிலைப்பள்ளியின் அடிப்படையை சரிசெய்து கொடுத்துள்ளார்கள்.*

*நோக்கம்:*
*மக்களின் வாழ்வியலை மேம்படுத்துவதையும், இயற்கையை பேணி காப்பதையும் முதன்மையாக கொண்டு அதற்கு தேவையான விழிப்புணர்வை நாங்களும் பெற்று அதனை மக்களுக்கும் கொண்டு செல்வதே இவ்வியக்கத்தின் நோக்கம்.*

*எங்களுடன் இணைந்து செயல்பட விரும்புபவர்கள் தொடர்பு கொள்ள...*
*பகிரி: +91 8220567322*

*இணையம்:*
*https://maintharkal.mannai.in/*

# குஞ்சத்தில் மிதந்த தொப்பியும்

பஞ்சடைத்த தொப்பையும்
வண்ணப்பூச்சுகளுக்குள் மின்னும்
கன்னமும்
மூக்கின் நுனி கண்ட உருண்டையும்
ஆளடைத்தாலும் நிரம்பாத ஆடையும்
வானமே தலையில் வீழ்ந்தாலும்
விலகிப் போகாத புன்னகையும்
அணிவகுத்துக் கொண்டு
உங்களை ஆசுவாசப்படுத்தும்
கோமாளியை நீங்கள்
ஓய்வில் சென்று பாருங்கள்
ஒட்டிப் போன வயிறும்
உருண்டு விளையாடும் வறுமையும்
அந்தரத்தில் அவனைத் தொங்கவிடுவதில்
கைதட்டியா சிரிப்பதென
கவலைப்பட வாய்க்கலாம்
நமக்குள்ளும் ஒரு கோமாளித்தனம்.

# என்ன செய்துவிடப் போகிறது

ஒற்றை வரி
எழுத்தில் எரிமலையா வெடிக்கும்
கழுத்தை நெறிக்கும்
கயிறாக மாறிவிடுமா
சுழலும் உலகின் அச்சை
சற்றேனும் அசைத்துப் பார்க்குமா
வறுமையின் கோட்டைக்குள்
வளமையைப் புகுத்தி
வாழ்வை மீட்டித்தருமா
உழைப்பின் ரேகைகளை
ஊருக்குக் காட்டி
ஓர் இரவில் விடியலை
உருவாக்கிவிடுமா
ஒன்றுமே செய்யாமல்
கரைந்துகூடப் போகட்டும்
வாசிக்கும் உனக்குள்
யோசிப்பையாவது தராமலா
போய்விடும் எழுத்து.

# அசையா பிம்பமென அருகில் உரசிட

குத்தும் ஊசிகளென நிமிரும்
தோல் முடிக்குள் தேகம் விளையாடிட
அம்பாரியின் இசையில்
கால்கள் உயர்ந்திட
ஆசிர்வதிக்க நீளும் தசைக்குழலில்
கரங்கள் பிணைந்திட
வனத்தின் வாசத்தைத் துறந்துவிட்டு
வருவோர் போவோரின்
வண்ணப்படங்களுக்கு காட்சி
கொடுத்தபடி
வாசலில் நிற்கும்
யானையின் கனவில்
அடிக்கடி காட்சி தருகிறார் கடவுள்.

—

இளையவன் சிவா,
நரசிங்காபுரம்.



# எம்மொழி செம்மொழி...!

பைந்தமிழ் நாட்டில் பிறந்து....!
தாய் மொழி செம்மொழி விடுத்து...!
தேன் தமிழ் பேச மறந்து....!?

பிற மொழி மோகம் கொண்டு...
கண்டவற்றை பேசித் திரியும்..?
என் தமிழா .....!?

உன் மொழி செம்மொழி...!
தமிழ் நம் பிறப்பின் அடையாளம்....!
கலாச்சாரத்தின் ஆணிவேர்....!
அறிவு வளர்க்கும் ஆயுதம்....!
நாம் வாழ்ந்த வரலாற்றை...
நாளைய சந்ததிக்கு தவறாமல்
கடத்தும் காலச் சக்கரம்....!?

எனவே -
நம் தாய் மொழி தமிழை
சுவாசிப்போம்....!
அதனை தரணி எங்கும்..
அயராமல் கொண்டு செல்வோம்...!?

—

முனைவர். சா.சம்பத்,
தேசிய பயிற்சியாளர்,
மன்னார்குடி.



---

# வேண்டியதைத் தர காத்திருக்கிறது பூமி

அதனிடம் வேறு எதையெதையோ
எதிர்ப்பார்த்து காத்திருக்கிறோம்.

கூடடையும் பறவையின் முதுகில்
கொஞ்சம் மஞ்சள் வெய்யிலும்
மாலை இருளும்.

பசுமைக் கோலம்
பூண்டது பூமி
லேசான தூறல்.

ஒருவர் குறித்த அபிப்பிராயத்தை
ஒவ்வொருவர் மனதிலும்
ஒவ்வொரு மாதிரி விதைக்கிறது காலம்.

பார்த்திருக்கச்
சருகானது
உதிர்ந்த பூக்கள்.

தூங்காமல் விழித்திருக்கும்
இரவினை என்னைப் போல்
தூங்காத யாரோ ஒருவனும்
பார்த்துக் கொண்டிருக்கிறான்.

பூவுக்கொரு முத்தமென
தருவாய் என்றிருந்தேன்.
இதழுக்கொன்றென
ஏராளம் தந்து முடிக்கிறாய்.

காதலியின் திருமணத்தை
முன்நின்று நடத்துகிறேன்
தோற்றது இருகாதல்.

நிகழ்காலத்தில் கடந்தகாலத்தை
நினைத்துக் கொண்டிருக்கிறேன்.
கேள்விக்குறியானது எதிர்காலம்.

பாவங்களை உள்ளது உள்ளபடி
பிரதிபலிக்கிறது
உணர்வற்ற நிலைக் கண்ணாடி.

இட்ட வேலைப் புதுமுகமெனப்
பார்க்கிறது
இந்த வேலைக்கு நாளை
நான் பழகிய முகம்.

ஓடினாலும் பள்ளத்தில் பதுங்கினாலும்
எனக்கான கரையை
உண்டாக்கிடும் நீர் நான்.

என்னிடமிருக்கும் அசையாச்
சொத்துக்கள்
நான் அசைவற்றுப் போக
எதுவும் என்னுடன் வரப்போவதில்லை.

என் வாசலைக் கடக்கும்
ரெட்டைக்கால் பூவுக்காக
வழிமேல் விழி வைத்திருக்கிறேன்.

மரங்களை அழிக்கிறாய்
காற்றுக்காகச் சன்னலைத்
திறக்கிறாய்.

பஞ்சமென்பதில்லை
உனக்கான கவிதைகளுக்கு
படிமங்களும் வார்த்தைகளும்.

கடலின் நீலத்தை
ஆகாயத்தில் சேர்க்கிறது
பறவைகள்.

—

கவிதைகள் ஆக்கம்,
பாரியன்பன் நாகராஜன்,
குடியாத்தம் - 632602
கைப்பேசி: 9443139353



அட்டைப்பட உதவி:
(செயற்கை நுண்ணறிவு ஓவியம்)
**மா. நிரல்யா,**
முதல் வகுப்பு, சிங்கப்பூர்.

ஆழ்ந்த உறக்கத்தில்
ஆழமான கனவாய்
இன்றைய சிந்தனையில் தவறி நாளைய
நினைவுகளின்
தொடர் வலையாய் இன்னும் நிழலோடு
நிஜமாடுகிறது
அன்று முடிந்த ஒரு காதல்
கதையின் அத்தியாயத்தை
திரும்ப எழுத தொடங்கி
வைக்கிறது
இரவுக்கனவுகள்....
வேண்டுமென்ற உதறி
தள்ளிய நம்பிக்கையற்ற
பழக்கவழக்கங்கள்
நம்பிக்கையாய் நடக்குமென்று
பிறக்கிறது பகல்கனவுகளாய்....
அனைத்தையும் தூரத்திய
பின்னும் வருகிறது
என்று மாறாத
வெறுமையை பொழுதுகளாய்
இனிய உறக்கமொன்று....

—

ச. சத்தியபானு



---

# சமத்தாக உன் மௌனம்

எதிரணியில் சேர்ந்ததே
உன்னிடம்
தோற்பதற்குத்தானே

மின் கடத்தல்
அனுபவம் கிடைக்கிறது
உன் விழிகளின் சக்தியில்

கொஞ்சிக் கொஞ்சி
அடைக்கலம் ஆகிறது உன்னிடம்
முயல்குட்டி மனது

உணர்வுகளை முடிச்சிட்டு
ஓடிஒளிந்து கொள்கிறது தரிசனங்களில்
ஊமையென வார்த்தைகள்

பற்றி எரியச் செய்து விட்டு
பதுங்கிக் கொள்ளும்
சமத்தாக உன் மௌனம்

அப்படியொரு நெருக்கத்தில்
சாத்தானாக உருவெடுக்கும்
துரத்தவியலாத தனிமைக்குள்
உன் சிநேகம்

ஏதும் பொருள் வேண்டவில்லை
ஞாபகப்படுத்திக் கொள்ள..
இல்லாமலே உன்னிருப்பின் இன்னிசை
என்கணந்தோறும்

சட்டென சுருண்டு சூல் கொள்ளுமுன்

தேனீர்ச்சந்திப்புகள்

உயிரில் இழைந்து
பின்னிக்கொண்டது
உன் குளிர்ந்த நேசம்

மீட்டிக் கொள்கின்றன
உரசி உரசி
நாம் சந்தித்த பொழுதுகளை
உள்வாங்கிய மரத்தின் இலைகள்

பாதச்சலங்கை கட்டி
சப்தித்துக் கொண்டு
இரவு முழுவதும் நிறையும்
நின் நினைவுகள்

## குறுங்கவிதைகள்

அழுது அடம் பிடிக்கிறாய்
ஆனாலும் கிடைப்பதில்லை
அநியாய உலகில் நீதி

ஒரே நிலா
ஒரே வானம்
எத்தனை கண்கள் பூமியில்

அணையும் சுடர்
பாதுகாப்பாக இருக்கிறது
கைகளுக்குள்

அடுக்கப்பட்ட கூழாங்கற்கள்
அழகாக இருக்கிறது
உச்சியில் அந்திச்சூரியன்

முளைக்கும் கட்டடங்கள்
திட்டமிட்டபடி
அழிக்கப்படும் ஆறுகள்

நெகிழி நீர்
விற்பனைக்கு அடுத்ததாக
பையில் அடைத்த காற்று

வளைந்து பாயும் நதி
நிமிர்ந்து நோக்கும்
பயனர் பெருமரங்கள்

உப்பிய உடல்
இளைத்து இளைத்து
நடைப்பயிற்சி

—

*Dr. ஜலீலா முஸம்மில்,*
ஏறாவூர், இலங்கை.

---

# துளிப்பாக்கள்

நெடுந்தூர பயணம்
அச்சத்தைப் போக்க
பேசிக்கொண்டே வரும் துடுப்புகள்

மலையை விடப் பெரியது தான்
என்னருகில் இருக்கும்
இந்தக் கம்பம்

நெடுஞ்சாலையில் நான்
மேலே பறவை
பறவைக்கு கிடைத்துவிடும் மரம்

பூவில் அமர்ந்த பட்டாம்பூச்சி
சிறகுகளை அசைக்கிறது
புத்தகத்தை வாசிக்கிறேன் நான்

அந்தி சாயும் வேளை
சூரியனுக்கு இறக்கைகளைத் தருகிறது
கூடு திரும்பும் பறவை

ஒருவரையொருவர் ரசிக்க
கரைக்கு வருகிறோம்
நானும் அலையும்

இனிப்பைத் தேடி
குதிரையின்மீது சவாரி
சிலையில் எறும்புகள்

ஒரு கால் உடைந்தும்
விண்ணில் பாய்கிறது
குதிரைச் சிலை

அடி கொடுத்த தாய்
வலியில் குழந்தை அழைக்கிறது
தாயையே...

—

சா. கா. பாரதி ராஜா,
செங்கல்பட்டு.
அலைபேசி: 9944315732



# பிரிவின் வ(ழி)லி

பிரிவென்பது வேறெதுவாக இருக்க
முடியும்? புரிதலுக்காக காலம் நடத்தும்
பலப்பரிட்சையே இன்றி...!

எப்பேற்பட்ட இதயத்தையும் நொடியில்
வலுவிழக்கச் செய்யும் உருவமற்ற
பேராயுதமல்லவா அது..!

உயிரைப் பிளந்து உதறிய பிரிவிடம்,
ஆறுதலை எதிர்பார்ப்பது ஏமாற்றம்
தானே..!

வலிகளை மொழிகளாக்கி
அம்மொழியினை மௌனத்தில்
பிரசவிக்கும் பூகம்பமே அது...!

—

வாழ்வியல் கவி,
சா.நாகூர் பிச்சை,
துபாய்.



# வகுப்பறையில் பாடம் கற்பிக்கும் மாணவர்கள் கட்டுரைத் தொடர் – 6

## (என் அறிவுக்கண்ணைத் திறந்த யுவாசினி!)

இன்றைய சூழலில் ஆசிரியர்கள் குழந்தைகளிடம் மிகவும் எச்சரிக்கையோடும் பொறுப்புணர்வோடும் நடக்க வேண்டி உள்ளது குறிப்பிடத்தக்கது. அதாவது, அண்மையில் கேரள மாநிலம் திருவனந்தபுரத்தில் இந்தியாவில் முதல்முறையாக பள்ளி மாணவர்களுடன் உலவ வந்த செயற்கை நுண்ணறிவு தொழில்நுட்பத்தில் உருவான ஐரிஷ் போல் பகுத்தறிவு படைத்த ஆசிரியப் பெருமக்கள் நடந்து கொள்ள நிர்ப்பந்தம் செய்யப்படுகின்றனர். இதில் ஆண் ஆசிரியர்களின் நிலை துயரமானதும் துக்ககரமானதும் ஆகும்.

குறிப்பாக, பெண் குழந்தைகளிடம் கூட எட்ட நின்று பேசும் நிலைக்குத் தள்ளப்பட்டிருப்பது வேதனைக்குரியது. இதில் உயர்நிலை மற்றும் மேனிலைப் பள்ளிகளில் பணியாற்றும் ஆண் ஆசிரியர்கள் பலரும் வயிற்றில் நெருப்பைக் கட்டிக்கொண்டு தான் பணிபுரிந்து வருகின்றனர் என்பது மிகையாகாது. ஏதேனும் சொல்லிக் கண்டிக்கப் போய் தம் பதின்பருவ வயது கோளாறு காரணமாகத் தவறிழைக்கும் பெண் பிள்ளைகள் தம் தவறை மறைக்க நல்லது சொல்லும் ஆசிரியர்கள் மீது பொய்யாக போலியாக புனையப்பட்ட கதைகளால் எங்கே தம் மேல் போக்சோ சட்டம் பாய்ந்து விடுமோ என்கிற பயத்தில் ஒவ்வொரு நாளும் பயந்து பயந்து வேலை செய்வது என்பது கவலை கொள்ளத்தக்கது.

அதற்காக தம் மனிதத்தன்மையைக் கழட்டி வைத்துவிட்டு ஒரு மனித எந்திரமாக குழந்தைகளுடன் வாழ முடியாது. நம் மடியில் கனமில்லை; அதனால் வழியில் பயமில்லை என்கிற வாழ்வியல் கருத்திற்கேற்ப இத்தனை நெருக்கடியையும் செவ்வனே சமாளித்து ஒரு தந்தை உள்ளத்துடன் உளப்பூர்வமாகப் பணிபுரிவதை வழக்கமாகக் கொண்டுள்ள இலட்சக்கணக்கானவர்களுள் நானும் ஒருவன்.

குழந்தைகள் எப்போதும் குதூகலம் மிக்கவர்கள். அதுமட்டுமின்றி விசித்திரமானவர்கள். அவர்கள் உலகம் என்பது தனி. அதில் எந்தவொரு பெரியர்களுக்கும் சொந்த தாய் தந்தையர் ஆனாலும் கூட இடமில்லை. இது புரியாமல் பலரும் இங்கு இன்றைய சூழல் குழந்தையாகத் தம்மைப்

பாவித்துக்கொண்டு நடித்து வருவது வேடிக்கை.

என்னைப் பொறுத்தவரை ஓர் ஆகச் சிறந்த குழந்தை இலக்கியத்தை நிச்சயம் அவ்வக்கால குழந்தையால் மட்டுமே உருவாக்க முடியும் என்று திடமாக நம்புபவன் நான். இதற்காக குத்தீட்டிகள் பல என் மேல் பாய்ந்தாலும் கவலையில்லை. உறுதியான உண்மை அதுவேயாகும். ஏனையவை அனைத்தும் போலச் செய்தலே ஆகும்.

கடந்த கால குழந்தையின் இலக்கியம் நிகழ்கால குழந்தைக்கு ஒருபோதும் அணுக்கம் ஆகாது. அப்படியிருக்க, நிகழ்காலப் பெரியவர்களின் கடந்த கால குழந்தையின் தற்கால இலக்கியம் எவ்வாறு ஈடாகும்? ஏனெனில், குழந்தைகளின் மனம் புதிர் நிறைந்தது. அவர்களது உலகில் சரி தவறாகும்; தவறு சரியாகும். பிழை அழகாகும்; நேர்த்தி அருவருப்பாகும். எந்நேரமும் பலவகைப்பட்ட குழந்தைகளுடன் ஒன்றித்துப் பழகும் ஆசிரியர்களாலேயே ஒரு குழந்தையின் மனத்தை முழுதாக அறிய முடிவதில்லை. ஓரளவிற்கு முயற்சிக்க முடியும்! அவ்வளவே.

இதில் மூன்றாம் தரப்பினர் முழுதாக அறிந்துணர்ந்து விட்டதாக அளந்து விடும் அலப்பறைகள் அனைத்தும் அபத்தமேயாகும். ஏனெனில், என் முப்பதாண்டு ஆசிரியர் பணியில் இப்போதுவரை குழந்தைகள் சூழ் உலகில் எந்நேரமும் உழன்று உயிர்மூச்சு விட்டுக் கொண்டிருந்தாலும் ஒவ்வொரு குழந்தையின் ஆன்மாவையும் உண்மையாக உணர்வதில் ஓராயிரம் உளச்சிக்கல்கள்.

அதற்கு, வயது முதிர்ச்சியும் அனுபவ அறிவும் நம்மையும் அறியாமல் குழந்தைகள் முன் முந்திக்கொண்டு வந்து தடைகளாக இருந்து வருவதை உணர்தல் நல்லது. ஆதலால்தான், நான் எப்போதும் இதுகுறித்து உறுதியாகச் சொல்வேன். குழந்தைகளை நான் இந்த நொடி வரை புரிந்து கொள்ள முயற்சிக்கிறேன் என்று.

என் எட்டாம் வகுப்பு மாணவர்களும் சரி. மாணவிகளும் சரி. என்னிடம் எளிதில் நெருங்கி வர யோசிப்பார்கள். அதற்காக நான் பயங்கரமான கண்டிப்பான நெருங்கி வர முடியாத ஆளும் கிடையாது. அஃது அவர்களது இயல்பாகக் காணப்படுகிறது. முடிந்தவரை என்னை நான் மாணவர்களின் ஆசிரியராகவே நிலைநிறுத்திக் கொள்ள முயன்று வருபவன் ஆவேன்.
அதேவேளையில், ஒன்றாம் வகுப்புப் படிக்கும் சிறுவர்களும் சிறுமிகளும் எந்தவொரு கூச்சமும் துளி அச்சமும் இல்லாமல் ஓடிவந்து உரசி ஒட்டிக் கொள்வதும் வாய் ஓயாமல் ஏதேதோ சொல்ல முற்படுவதும் எனக்கே பெரும் வியப்பாகும். இத்தனைக்கும் நான் அவர்களது வகுப்பாசிரியரும் கிடையாது; பாட ஆசிரியரும் கிடையாது. மாலை வேளையில் கிடைக்கும் அந்த சொற்ப நேரத்தில்

ஒருவர் மீதான ஒருவரின் புகார்களைக் கேட்க இரண்டு காதுகள் போதாது.

தவிர, அவர்களுடைய உலகத்தில் நம்மை இணைத்துக் கொள்ள விரும்புவதில்லை. நம்மை விலக்கி வெளியே தான் வைத்திருப்பார்கள். இந்த சிறுவர் உளவியலில் காணப்படும் நடப்பைப் புரிந்து கொள்ளாதப் பிறவிகள், 'நான் குழந்தை ஆயிட்டேனே!' என்று பிதற்றுவதைப் பார்க்கையில் வேடிக்கையாக உள்ளது. குழந்தையாக இயல்பாக வாழ்தலுக்கும் பாவனை கொண்டு நடிப்பதற்கும் நிறைய வேறுபாடுகள் இருக்கின்றன. ஒன்றாம் வகுப்பு யுவாசினி என்னை அப்படித்தான் அவள் விளையாடும் விளையாட்டிலிருந்து வெளியே தள்ளிவைத்து ஆடிக் கொண்டிருந்தாள். ஓர் ஆட்டுமந்தையினை மேய்ப்பவர் எவ்வாறு மிக லாவகமாக அதன் திசையைத் திருப்பி விடுவதைப் போல் குழந்தைகள் தம் கிராமத்து எளிய விளையாட்டுகளை எங்கே யார் எப்படி மாற்றியது என்று தெரியாமல் புதியதொரு விளையாட்டை ஆடிக் கொண்டிருப்பதை அறிந்திலர் யாரும் கிடையாது.

முன்பனிக் காலத்தில் தொடங்கிய சிறுமிகளின் சில்லுக்கோடு விளையாட்டானது பின்பனிக் காலத்தில் தட்டாங்கல் ஆட்டமாக உருமாறி நிற்கிறது. இதனைப் பாண்டிக்கல் என்றும் கூறுவர். ஒரே மாதிரியான உருண்டையான சிறுசிறு கருங்கற்களையோ கூழாங்கற்களையோ கொண்டு பெரும்பாலும் சிறுமியர் விளையாடும் இந்த விளையாட்டு சங்க காலத்தில் தெற்றி எனப்பட்டது.

கிடைக்கும் இடைவேளையின் போதெல்லாம் எட்டு வகுப்பு முடிய உள்ள சிறுமிகள் இந்தத் தட்டாங்கற்களை எடுத்துக் கொண்டு குறைந்தபட்சம் இருவராக உட்கார்ந்து விடுகின்றனர். அன்று யுவாசினியும் அப்படித்தான் மாலை வழிபாட்டுக் கூட்டத்திற்கான அழைப்பு மணி அழைக்கும் வரை விளையாட தனுசிரியை கூட வைத்துக் கொண்டாள்.

இதில் அவர்களுக்கிடையில் நான் புகுந்தது பெரும் குற்றம். பக்கத்தில் போய் அமர்ந்து கொண்டேன். ஆனாலும், அதை அவர்கள் பெரிதாக எடுத்துக் கொள்ளவில்லை. என்னை ஓர் அந்நிய ஆளாகவும் நினைத்தது மாதிரி தெரியவில்லை. தனுசிரியிடம் வழக்கம் போல் வேடிக்கை செய்து விளையாடிக் கொண்டிருந்தேன். எனக்கு நேர் எதிரே யுவாசினி குட்டிக் குட்டிக் கற்களுக்குப் பதிலாக ஏதோ ஒரு சிறு பளிங்கு உருண்டையைப் போல பளபளப்பாக எதையோ வைத்திருந்தாள்.

புது எவர்சில்வர் உருண்டை. என்னையும் விட்டு வைக்கவில்லை. ஈர்த்தது. "கொடு! பார்க்கலாம்" என்றேன். அதிகாரத் தொனி அதில் இல்லை. இலேசான கெஞ்சல் மட்டுமே தொக்கி நின்றது. இன்னொன்று சிறுவர்

சிறுமியரிடம் அதிகாரம் செலுத்தி எதையும் பெற முடியாது என்பது எனக்கு நன்கு தெரியும்.

எளிதில் கொடுத்து விடுவாள் என்று தான் நினைத்தேன். அதற்காக எந்தவொரு மெனக்கெடலும் என்னிடமில்லை. நானும் காட்ட விரும்பவில்லை. ஆனாலும் அவள் அதை என்னிடம் கொடுக்க மறுத்து விட்டாள்.

"தா புள்ளே! நம்மச் ச்சாரு எடுத்துக்க மாட்டாரு!"

சிபாரிசு செய்தாள் தனுசிரி. அவளோ அதற்கும் மசியவில்லை. இப்போது என் நெஞ்சில் இலேசான ஒரு கீறல் கோடு போடத் தொடங்கியது.

"நா எடுத்துக்க மாட்டேன். தா! பார்த்துட்டு தந்துடுறேன்!"

உறுதிமொழி கொடுத்தேன். ஏமாற்றம் உள்ளே எதுவோ செய்தது. முகத்தைப் பாவமாக வைத்துக் கொண்டேன்.

அவள் எதற்கும் மசியவில்லை. கூட இருந்த அவளது சிநேகிதி ஆட்டம் தடைபட்ட வெறுப்பில் கத்திச் சொன்னாள்.

"அடச்சீ! குடுடீ! சாரு சாமி சத்தியமா பார்த்துட்டு தந்துருவாங்க."
கூட சேர்ந்து அதற்கு நானும் ஒப்புக்கு ஆமாம் என்பது போல தலையாட்டினேன். வெட்கத்தை விட்டு.

கெட்டியாக அதை உள்ளங்கைக்குள் மூடி மறைத்துக் கொண்டு முடியாது என்று அடம்பிடித்துக் கொண்டிருந்தாள் யுவாசினி. வாய் நிறைய புன்னகைப் பூத்துக் குலுங்கியபடி மண்டையைக் கோணல்மாணலாக ஆட்டிக்கொண்டு.

"சாரு எடுத்துகுவாங்க! அதுனால நான் தரமாட்டேன்!"

மீண்டும் மீண்டும் இதையே அவள் உறுதிபட கூறிக் கொண்டிருந்தாள். எப்படியோ அங்கு வந்து சேர்ந்த பெரிய பிள்ளைகள் எனக்காக வாதாடிக் கெஞ்சினர். கொஞ்சம் கூட அவள் மசியவில்லை. மாறாக தன் கையைக் கெட்டியாக மூடிக் கொண்டாள்.

எனக்கு அழுகை முட்டியது. வெளிக்காட்டிக் கொள்ள முடியவில்லை. அரை நூற்றாண்டு வயதும் அதில் முக்கால்வாசி ஆசிரியர் பணி அனுபவமும் குறைந்தபட்ச நேர்மை உணர்வும் முடிந்தவரை கொடுக்கும் இடத்தில் மட்டுமே இருக்க வேண்டும் என்கிற வைராக்கியமும் ஒரு சின்னஞ்சிறு சிறுமி முன் இப்படி மண்டியிட வைத்து விட்டதே என்கிற எண்ணம் என்னைக் கொன்று தின்றது.

அங்கு குழுமியிருந்த அனைவரையும் கண்களால் போகச் சொன்னதற்கு பின்_
"யுவா! சாரு அது என்னன்னு பார்த்துட்டு உடனே தந்துடுவேன்!"
கண்ணீர் மட்டும் தான் வரவில்லை.
"போங்க சார்! நீங்க தரமாட்டீங்க!"

சிணுங்கினாள். பிஞ்சு முகம் சுருங்கிப் போயிருந்தது.

"அப்பனா ஒன்னோட டூஊ...!"

அவளிடம் பதிலில்லை.

இருவரும் கொஞ்ச நேரம் அப்படியே அமைதியாக இருந்தோம். யாரும் ஒருவரை ஒருவர் நேரில் பார்த்துக் கொள்ளவில்லை. அவ்வளவு சத்தத்திற்கு இடையிலும் கடிகாரத்தின் துடிப்புடன் இதயத்துடிப்பும் இணைந்து கொண்டது போல் ஓர் உணர்வு.

"சரி. அப்பனா நீங்களே இதை வச்சுக்கோங்க!"

அலுத்தபடி உள்ளங்கையை என்முன் விரித்துக் காண்பித்தாள். அந்த வெள்ளி உருண்டை ஈரம் பட்டு பல்லிளித்தது. மேலும் அவளது பிஞ்சுக்கை ரோஜாவாக சிவந்து கிடந்தது.
"ஓ! இதுவா? சரி சரி. இதை நீயே வச்சுக்கோ. வாயிலே எக்காரணம் கொண்டும் போட்டுடக் கூடாது! புரிஞ்சுதா?"

அதைத் திரும்பக் கொடுத்ததும் அவளுக்குள் அவ்வளவு மகிழ்ச்சி. எங்கே அவள் நினைத்தது போல் நான் அதை எடுத்துக் கொண்டு விடுவேனோ என்கிற தவிப்பு அவள் கண்களில் பளிச்சிட்டது.

வழிநெடுக இது குறித்தே நான் யோசித்தபடி வந்தேன். குழந்தைகளிடம் பெரியவர்கள் அவர்களது உடைமைகள் மீது ஒருபோதும் உரிமை கொண்டாடுவதில்லை என்கிற நம்பிக்கை ஊட்டுவது மிகவும் அவசியம் என்பது இப்போது எனக்கு நன்கு புரிந்தது.
வகுப்பு தொடரும்...

--

முனைவர். மணி கணேசன்

# கனியும் வாலிபம்

காதல் பாடல்களின் கலவையை
அள்ளி வீசியவாறே
ஊர்வலம் வரும் ஊதைக்காற்று

அத்திப்பழக் காமச்சூட்டை
மனக்கதவில் விநியோகம் செய்யும்
ஆங்கிலச் சிற்றெழுத்தின்
ஆறாம் எழுத்தை ஒத்தவள்

எப்பொழுதும் தூறலாய்ச் சொட்டும்
ஆண்மை வானம்
கொட்டும் மேகவெடிப்பு மழையாய்
பருவ மாற்றம் அடைகிறது
மூங்கில் பூவின் நிழலுக்கு
ஒரு முத்தம் கொடுத்ததற்கே

சேலாப்பழம் அவள்
கற்பை மொய் எழுதினால்
என்னாவேனோ?...

—

ஸ்ரீவி. முத்துவேல்,
துபாய்.



# அணி இலக்கணம்

பாப்பாவிற்கு பூ எங்கே
வைக்க வேண்டும் என்று கேட்டால்
தன் கையால் தனது
தலையைத் தொட்டு காண்பிக்கிறது

கொலுசு எங்கே
போட என்று கேட்டால்
கால்களைச் சுட்டுகிறது சுட்டி

பொட்டு எங்கே வைக்க வேண்டும்
என்று கேட்டால்
நெற்றியின் நடுமையத்தை
தொடுகிறாள் மழலை

தோடு எங்கே போட வேண்டும்
என்றால்
காது மடலில் கையால்
ஒரு கவிதையே எழுதுகிறது

எந்த அணிகலனை
எங்கே அணிய வேண்டும் என்று
முளைத்து மூன்று இலை விட முன்பே
அவள் சொல்லும்போது
ஐந்து இலக்கணங்களில்
அணி இலக்கணம்
வெகு அழகாகி விடுகிறது.

—

மு. ஆறுமுகவிக்னேஷ்,
சத்திரப்பட்டி.

---

# குமிழ்

வறண்ட ஆற்றங்கரையின்
ஒரு கரையிலிருந்து
மற்றொரு கரைக்கு பயணம்
கூட்டமாய் செல்லும்
பள்ளிச்சிறுமியரில்
கடைசியாக செல்லும் சிறுமி
கரையிலிருக்கும் கற்சிலையினை
திரும்பிப் பார்த்து  கன்னத்தில்
போட்டுக்கொள்கிறாள்
நீர் நிரம்பிக் கடக்கையில்
எழுந்தமறும் ஒரு
குமிழியினைப் போல

சட்டென திரும்பிக்கொள்கின்றன
சூடுதாங்காத அவளின் மென்பாதங்கள்
தன்னைத்தானே
சுட்டுக்கொள்கிற
வறண்ட ஆறினைப்
பார்த்தவாறிருக்கிறது
வெயில் படும் கடவுள் சிலை!

—

ரகுநாத். வ,
மதுரை.

# குறுங்கவிதைகள்

மரங்களை வெட்டாதீர்கள்
முழக்கமிடுகின்றன
சருகுகள்

முழக்கமிடும் சருகுகளுக்கு
முத்தமிடுகின்றன
காற்று

மண்ணை முத்தமிட்டப்பிறகே
தன் கூட்டிற்கு திரும்புகிறது
நத்தை

ஆளுக்கொரு கண்ணாடியை
ஏந்தி நிற்கின்றன
அதிகாலை புற்கள்

கட்டை விரலை
காணிக்கையாய் கேட்பதில்லை
புத்தகங்கள்

கூலியின்றி கல் சுமக்கிறது
ஏழைத்தாயின் வயிற்றில்
வளரும் குழந்தை

குளித்தெழுந்த நிலா
தலைத்துவட்டி விடுகிறது
மேகம்

உறக்கத்திலிருந்து எழும்
குழந்தை
உடன் விழித்துக் கொள்கிறது
பொம்மை

ஊஞ்சலாட்டம்
மகிழ்ந்தாடுகிறது
கூந்தல்

ஒரு முறை தொட்டதும்
விடுவதே இல்லை
மது

புத்தகத் திருவிழா
அலை மோதும் கூட்டம்
உணவகங்களில்

இறந்து கிடக்கிறான்
எளிதில் கடக்கிறோம்
மலக்குழியில் மாயாண்டி

ஒரு பல்கலைக்கழகம்
உரையாட மறுக்கிறது
ஊடல்

—

பெ. விஜயலட்சுமி,
காஞ்சிபுரம்.
கைப்பேசி: 6380704001



# இரவை மயக்கும் நிலா!

மரங்களைத் தழுவும்
மழையென
விழிகளில் கலவரம்
பொழிகிறாய் ...

உயிரினைத் தழைக்கும்
அமுதென
தோள்களில் உருகி
வழிகிறாய் ...

நதியினில் படரும்
நிழலென
மார்பினில் நெருங்கி
குழைகிறாய் ...

வழிகளில் பூத்த
வனமென
நினைவினில் நறுமணம்
கமழ்கிறாய் ...

இரவினை மயக்கும்
நிலவென
அருகினில் வேள்வி
வளர்க்கிறாய் ...

பகலினைத் தீய்க்கும்
கதிரென
பிரிவினில் எரிமலை
வெடிக்கிறாய்!

## புண்ணிய அவதாரம்

கவிதையின் வடிவமாகி
கடமையின் உருவமாகி
தாய்மையின் சிகரமான
தனிப்பெருங் கருணைநீங்கள்

மண்ணின் மகத்துவமாய்
மகிழ்ச்சியின் உறைவிடமாய்
அன்பின் அடைக்கலமான
அருட்பெரும் சோதிநீங்கள்

அச்சம் மடம் நாணம்போக்கி
அடிமைநிலை தூரமாக்கி
ஞானத்தாலும் வீரத்தாலும்
ஞாலமாளும் தேவிநீங்கள்

நதிகளின் பெயராகி
நவசக்தி வடிவாகி
புவியினைக் காத்துநிற்கும்
புனிதமிகு பிறவிநீங்கள்

விழியெல்லாம் கண்ணோட்டம்
விரலெல்லாம் செயல்திட்டம்
உறவுகளின் உயிரோட்டம்
உடனிருக்கும் கொண்டாட்டம்

காதலின் கருவூலம்
காலத்தின் கடிகாரம்
கற்பொழுக்க அடையாளம்
காவியத்தின் புகழாரம்

இன்னலை நெஞ்சில்வைத்து
இனிமைகள் சொல்லில்வைத்து
புவியெங்கும் இயங்கிடும்
புண்ணிய அவதாரம்.

## வாய்ப்பு

நீ உடனிருந்து
சொர்க்கம் அருளாமைக்கு

வருந்துவதில்லை
ஒருநாளும் நான்
பேரன்பின் நினைவுளால்
எனை முப்பொழுதும்
கவர்ந்து ஆள்கிற பாக்கியம்
வாழ்நாள் நெடுகிலும்
வாய்த்திருத்தல் சுபம்.

## உன்னோடு மட்டும்

எல்லோரையும் மௌனத்தோடே
எதிர்கொள்ளும் நான்
மணிக்கணக்கில்
பேசி வழிகிறேன்
நீயிருந்தால் உன்னோடு
நீ பிரிந்தால்
நின் நினைவோடு

பேசுதல் சுகம்
பேசுதல் தவம்
பேசுதல் வரம்
பேசுதல் சொர்க்கம்
உன்னோடு மட்டும்.

—

பொன். தெய்வா,
ஐவேலி.



## சூரியக்கதிர்கள் நேரே விழும் ஓட்டைக் குடிசை,

பல நாட்களாய் உணவு தயார்
செய்யப்படாத
சமையல் அறை,

கிழிந்து நார் நாராய் போன
கட்டில்,

நெளிந்த பாத்திரங்கள்,
குண்டும் குழியுமான மண்தரை,
குழி விழுந்த கன்னம்,
ஒட்டிப்போன வயிறு,

பல நாட்களாய் எண்ணெய்
பார்க்காத தலை,

இவற்றுக்கு நடுவே பத்திரமாய்
இருக்கிறது...

பல ஆண்டுகளாய்
செலவழிக்காமல் வைத்திருந்த
ராசியான நூறு ருபாய் கட்டு!

— மு. முபாரக்,
திருச்சி.



# பசியின் ராகம்!

தெருவில்
புல்லாங்குழல் இசைப்பவனின்
மூச்சுக்காற்றில்
பசியின் ராகம்!

# பேரன்பு கொண்ட பெரியோர்களே!

கவனமாக இருங்கள்
இவர்கள் உங்கள் ஊருக்கும் வரக்கூடும்

பெரிய பெரிய கார்களில் வந்திறங்கி
நம்ம ஊரில் நாமே டீக்குடிக்காத
கடையில் டீக்குடிப்பார்கள்!

உங்கள் வீட்டு குழந்தைகளைத்
தொட்டுத் தூக்கி கொஞ்சுவார்கள்.

சாலையின் நடுவே நின்று
பிரச்சாரம் செய்துகொண்டே
அவசர ஊர்திக்கு வழிவிடுவார்கள்!

வீட்டுக்கு வெளியே கட்டில்களை
போடாதீர்கள்
அதில்தான் படுப்பேன் என்று
அடம்பிடிப்பார்கள்!

கூழ் குடிப்பதாக இருந்தால்
மறைத்துக்குடியுங்கள் அதையும்
பறித்துக்குடிப்பார்கள்.!

திண்ணைக்
கிழவிகளிடம் ஆசிர்வாதம்
கேட்பார்கள்...!

முக்கத்துச்சிறுவர்களிடம் பேட்டைப்
பரித்துக்கொண்டு கிரிக்கெட்
ஆடுவார்கள்!

சாலையோர உணவகத்தில்
வாக்குறுதிகளைப்போலவே
புரோட்டக்களையும்
அடித்துவீசுவார்கள்!

தெருக்குழாயில் தண்ணீர் தராதவர்கள்
கங்கையையும் காவிரியையும்
இணைப்போம் என்பார்கள்

சாலை விபத்தில்
காயமடைந்தவனை அவர்களின்
வாகனத்தில் ஏற்றிக்கொண்டு
ஓடுவார்கள்.!

கவனமாக இருங்கள் இவர்கள் உங்கள்
ஊருக்கும் வரக்கூடும்

—

நேசன் மகதி

# காதலிசம்

மழையோடு நனைய விரும்பும் நேரமெல்லாம்
நீ அருகில் இருப்பதாகவே ஞாபகம்
மழையாக....!

*

தூரமாக நீயும்
தூரலில் நனைந்து நானும்
விரல்களை நீட்டி
பிடிக்காத நேரத்தில் தான்
ஒரு வண்ணத்துப்பூச்சி கொஞ்சி
செல்கிறது காதலால்
நீயும் வாயேன்
கொஞ்சம் கொஞ்சிக் கொள்வோம்......!

*

நிலவினை பிடித்து பிழிந்தெடுத்து
கூந்தலில் செருகியவளுக்கு
வான்மதியெனப் பெயரிட்டு வீட்டில்
கரைந்தும் வளர்ந்தும்
கரைக்கிறாள் என்னை....!

*

தீர்ந்துவிடும் என நினைக்கும்
பொழுதெல்லாம்
தீராமல் நிற்கிறாய்
காதலின் தாகமாய்....!

*

உணர்வுகளுக்கு சிறு அழகூட்டி
அவளென்று பெயர்வைத்த பிறகு
குருதியோடு நயனமிடுகிறது
அவளாகிய மனமொன்று...!

*

நீயும் நானும் ஒன்றோடொன்றென
சொல்லவிட்டு
சென்றுவிட்டாய்
உண்மையாகவே ஒன்றாகவேதான்
இருக்கிறோம்
ஒருவரின் நினைவில் ஒருவர்
ஒன்றாகவே
அவரவர் பயணத்தில்...

*

கண்ணாடி பார்க்கிறேன்
தினம் உன்னுடன் பேசுகிறேன்
நீ
விட்டுப்போன
ஒரு பொட்டினைச் சுற்றி
எனது உலகத்தை வரைந்து வைக்கிறேன்
வத்துவிடு ஒரு கவிதைப்பயணம்
சென்றிடுவோம்...

*

ஒரு முத்தம் கொடுத்திருக்கலாம்
கொஞ்சம் தள்ளி நின்றிருக்கலாம்
இத்தனை அருகில் நின்று கொண்டு
இல்லையென்பதுதான்
கடினமாகிறது காதலில்....

*

நிச்சயம் நான் மாறிவிடுவேன்
நம் காதலை மாற்றுவதற்குதான்
நாம் மீண்டும் பிறக்கவேண்டும்
காதலர்களாய்...

*

துவட்டிடாத கூந்தலுக்கு

எனது விரல்கள் தேவைப்பட்டாலும்
நீ
வேண்டாமென கூறிவிடும்
கர்வத்தில் தான்
காதலின் கன்னங்கள் சற்று
சிவந்திருக்கின்றன
நேற்று மூக்கு சிவந்ததைப் போல....

*

கடிதங்களில் எழுதியனுப்பிய
காதல் வசனங்களுக்கு
நானே காரணகர்த்தா
வரிகளாய் மாறியது மட்டும் நீ

சிந்தனையாகிறேன்
கவிதையாய் மாறிவிடுகிறாய் நீ
கவிஞன் என தலை சொறிந்துக்
கொண்டே செல்கிறேன் நான்
புனைப்பெயருடன்.....

*

எனது கவிதைகளுக்கு
மையிட்டு முடித்தபின்
நீ கண்சிமிட்டுவதுதான்
காதலின் ஆத்மார்த்த காவியமாகிறது
நம்மைப்போல்....

*

கையோடு கை சேர்த்தேன்
காதல் வசப்பட்டேன்
நிலவும் கதிரவனும்
ஆச்சர்யமானது ஒரே வானில்..

*

நதியினில் படகாகி
நனைவதைவிட-உன்
விரல் பட்டு வியர்வையாய் மடிவது
சுகமாகத்தான் இருக்கிறது எனக்கு...!

*

ஆகாயத்தை பிளந்தொழுகிய
வான்மழையில் நனைவதை விட
வேறு எவ்விசத்தில் எனைக்கொன்று
விடுவாய் நீ..

*

காதல் செய்ய இரண்டு நோட்டுகளும்
ஒரு பேனாவும் எடுத்து செல்கிறேன்
இதழான காகிதமும்
விரலான பேனாவும்
இருப்பதை மறந்தே போனேன்....

*

ஒரு சிமிக்கி ஆடல்
துளி கொலுசின் பாடல்
இசைஞானியாக்கி விட்டது
என்னை
இதயத்தின் அறைகளை பியானோவாக
மாற்றிய அன்பே எனும் சொல்...

*

பொய்களையும்
சில பொம்மைகளையும் இருகரங்களில்
ஏந்தி வருகிறேன்
பொய்கள் உனக்கு கவிதைகளாகவும்
பொம்மைகள் உனக்கு
விளையாட்டாகவும் மாறிவிட்டது
இடையில் எப்படி சிக்கியிருப்பேன் நான்
என்பதே விந்தை...

*

பெருங்காடு.
மூங்கில் குத்து..
புல்லாங்குழல்...

சுவாசமாய் நான்
இசையாய் நீ
அசைந்தாடுகிறது
காதலின் மாக்காடு...

*

மீண்டும் மீண்டும் சொல்கிறேன்
மனதிற்கொள்
எனது முகவரியில்
காற்புள்ளிக்கும் முற்றுப்புள்ளிக்கும்
இடையில் வரையப்பட்ட இதயம் நீ..

*

நான்
நான்காம் வகுப்பு படித்தேன்
நீ
மூன்றாம் வகுப்பு படித்தாய்
சிறு மாங்காய் துண்டின்
பரிமாற்றலில் தான்
நமது காதலின் துவக்கமாம்
"காதல் விடு தூது" கற்றுத்தந்த ஆசிரியை
சொன்னார்
நமது திருமணத்தில்...

*

பட்டாம்பூச்சியின் வண்ணங்களுடன்
உனது கண்மை சேர்த்தால்
பெண்'மை'ப்பூச்சாய் மாறிவிடுகிறது
இருக்கட்டும்
இனி கண்மைப் பூச்சிகளை தேடத்
தொடங்குவோம்...

*

நீ கிழித்தெறிந்த
எனது உணர்வு வழிந்த
காதல் கடிதத்தில்
மிஞ்சியது என்னவோ
'அன்புடன் நான்' எனும் வார்த்தை
துண்டுகளே..
நீ
கிழித்தெறிவதற்கு முன்னரே
மிஞ்சியது என்னவோ நான்தானே...

*

இப்பொழுதெல்லாம்
இருசக்ககர வாகனப்பயணம்
இனிமையாகத்தான் பயணிக்கிறது
என்னவளின் கரங்கள்
எனது நிழலையும் விடாமல்
அணைத்துக்கொள்வதால்...

*

தார்சாலைகளை நனைத்து செல்லும்
மழைக்கு
தலை துவட்டி சேலை உதறிடும் அவளின்
துவட்டிலில்
மீண்டும் சினுங்க தொடங்குகிறது
குழந்தைபோல .....

*

கைக்குட்டையின் ஈரமெல்லாம்
அவளில்லாத தருணங்களில் கண்ணீர்
துடைத்தாளும்
பிழிந்துவிட மனமில்லை
எரிந்துவிட மனமில்லை
அவளை நினைத்து துடைத்த
கண்ணீர்த்துளியை
ஒவ்வொரு துளியும் அவளாகிப்
போனதால்....

*

இயற்கையை எழுதி எழுதி
அழுத்துப்போன எனக்கு
கசக்கியெறியப்பட்ட

யாரோ ஒருவனின்
காதல் கடிதம்
ஒரு வரியை சொல்லிவிட்டுப்போனது
'அன்புடன் காதலன்' என்று...

*

இதோ மழை
நீ
எங்கு நனைகிறாயென நானறியேன்
ஆனால்
நான் நனைந்துக்
கொண்டுதானிருக்கிறேன்
உன் முத்தமழையில்....

*

எனது அமைதியின்
ஆழ்துளை மனதில்
உனது வெறுப்புகளையும்
கோவங்களையும்
கொட்டிவிடு
நான் ஏற்றுக் கொள்கிறேன்
நீ கவலை கொள்ள வேண்டியில்லை
உன் வார்த்தைகளின் கனலில்
குளிர்காய எனைவிட்டால்
யார் இருக்கிறார் இதமாய்....

*

ஒரு மழைக்காலம்
ஒரு கோடைக்காலம்
இரண்டையும் நீயே தந்து செல்கிறாய்
நான்
நனைவதா
ஒடி ஒழிவதா....!

—

சே. கார்கவி கார்த்திக்,
நாகப்பட்டினம்.



---

# தோல்வி அழகு

ஒரு கனிக்கு காத்திருக்கும்
பசித்த வயிற்றிடம்

சிறு நிழலுக்கு வேண்டி நிற்கும்
வெடித்த பாதத்திடம்

ஒரு வெற்றிக்கு காத்திருக்கும்
முதிர்ந்த வயதிடம்

துளி நிம்மதிக்கு சோர்ந்திருக்கும்
கனத்த மனமிடம்

ஒரு காதலுக்கு பூத்திருக்கும்
நரைத்த கூந்தலிடம்

ஓர் இருக்கைக்கு காத்திருக்கும்
தொலை தூர தூக்கத்திடம்

நான் தோற்றுக் கொண்டே
இருக்க விரும்புகிறேன்

**ஊர் சிறுவன்**

ஊர் நிலவைக் காட்டினாய்
உயிர் உருக ஓடும்
ஓடையைக் காட்டினாய்
ஆராய் பாட்டி வீட்டு திண்ணை
டேவிட் தாத்தா வீட்டு சந்து
பாலமுருகன் தியேட்டர்
பள்ளத்துக்கு போகும் வழி
ஊர் வாசல் புளியமரம்
புது பெயிண்ட் அடிச்ச
சின்ன பாலம்
பளிச்சுனு இருக்கற பெரிய வீதி
ஊர் சாட்சி ஊர்க்கிணறு
ஊர் வானம் தான் எத்தனை அழகு
ஒவ்வொன்றையும்
புகைப்படத்தில் காட்டினாய்
அப்படியே சிறு வயதில்
சைக்கிள் ஓட்டி விளையாடும்
ஊர் சிறுவன்
என்னையும் தான் காட்டேன்

## கனம்

முடிய போகும் இட்லியை
எத்தனை நேரம்
உருட்டிக் கொண்டிருப்பது
முகம் பார்க்கவும் முடியவில்லை
இயல்பின் கூச்சத்தை என்ன செய்ய
இதற்கு தான் அடுத்தவர் வீட்டில்
உணவருந்துவது இல்லை
உண்மைக்கு அருகே
வரவே மாட்டார்கள்
ஊர் கதை பேசுவதெல்லாம்
அடுத்த இட்லியை தவிர்க்கவா
இயலாமை இப்படித்தான் சிந்திக்கும்
என்ன எழுந்துடீங்க என்ற போது
நைட் நேரத்துல அளவா தான்
சாப்டணும் என்றேன்
ஆமோதிப்பது போல
பல் தெரியாமல் புன்னகைத்தார்கள்
ஒரு இட்லிக்கு இத்தனை கனம்
என்று அன்று தான் புரிந்தது

## நிலா கவிதை

ஏன் நிலவென்றால் இத்தனை பித்து
உவமைக்கு வைத்துக் கொள்கிறோம்
உணர்வுக்குள் அடைத்துக் கொள்கிறோம்
காதலிக்கு பொருத்துகிறோம்
கழுத்தில் தூரி கட்டியும் நிறுத்துகிறோம்
சோகத்திற்கு சொர்க்கத்திற்கு
கனவுக்கு கவிதைக்கு என
நிலவுக்கு ஏன் இத்தனை முகங்கள்
உள்ளூர குறுகுறுக்கும்
கள் வட்டம் என நம்புவது ஏன்
சிறுவன் ஓட்டும் டயர் வண்டி
வீடு வரை உடன் வரும்
சக்கர கால்கள் இல்லையா
ஜன்னல் வழி வாசல் வழி
வீதி வழி ஊரின் வழி
நிலவுக்கு தான் எத்தனை துருவம்
நிலவே முகம் காட்டு நிலாவே வா
நிலா அது வானத்து மேல
நிலா காயும் நேரம்
நிலவு பாட்டு நிலவு பாட்டு
நிலவே நிலவே சரிகம பதநி
எத்தனை எத்தனை நிலா பாட்டு
பாட்டி வடை சுடவும் நிலா வேண்டும்
ரோவர் சுற்றிப் பார்க்கவும் நிலா
வேண்டும்
வெண்ணிலா பெண்ணிலா
நீல நிலா நீந்தும் நிலா
பால் நிலா பவள நிலா
குட்டி நிலா குளத்து நிலா
எத்தனை எத்தனை நிலாக்கள்

கல் மண் கரடு என்பவன் ஏலியனாக இருக்க வேண்டும்
நிலவுக்கு பூச்சூட தெரிந்தவன் தான் பூமியில் இருக்கிறான்.

## அன்புள்ள ஜுனிக்கு

அந்திமந்தாரையை அள்ளிக்கொண்டு மலை உச்சியில் இருந்து இறங்குகிறவன் புன்னகை இது. அடியாத்தி.... அளாவல் அத்துமீறும் போது அங்கொரு சுனை உருவாக்கி சிரிப்பதும் தான் அது. பிளிறும் சூரிய பூச்சாண்டி பார்க்கிறான். ஆனாலும் நீல வானத்தின் நிம்மதி சூழ் வெளியில் நிற்க... ஒரு கடிதம் தீட்டலாம். அதில் ஆரஞ்சு மிட்டாய் நிறத்தொரு கனவை சூட்டலாம். அப்படியே அதனடியில் துண்டு சீட்டில் உன் பெயர் எழுதி சுடர் மூட்டலாம்.

சொல் கொண்டு பதியம் போடும்.... சொக்க வைக்கும் ஒரு ராட்டினம் இருக்கிறது. ஏறி சுற்றுவதும்.. சுற்றி ஏறுவதும் விளையாட்டு போக்கில் கொள்ளும் விடியல். மௌனம் கொண்டு மத்தளம் அடித்து புன்னகை பீப்பியில்... பெயிண்ட் அடிக்கலாம். சுந்தர சிரிப்பில் மல்லிகை பூக்கட்டும்.

மலை முகட்டில் இருந்து ஒரு மதியமாய் மயங்கி பார்க்கிறேன். மேல் வண்ண புறாக்களின் புதிர்களோடு இதோ இந்த வருடமும் வந்திருக்கிறது. பூங்கொத்தோடு உன் பூடக உலாவை யார் கண்ணுக்கும் தராத ஜீ பூம்பா என்னிடம் இருக்கிறது. அதன் கண்ணாடி றெக்கைகளை விசுறுகிறேன். உனக்கு மட்டும் காட்டும் திசை எட்டும் நந்தவனம் ஃபிரீஸ் ஆகிறது.

வார்த்தைகளுக்கு நடுவே நான் ஒளிய... வாக்கியத்துக்கு நடுவே நீ விளைய.. கட்டுரை மேட்டில் கவிதை விளைச்சல். தென்றலுக்கு தெரியும் இந்த கூத்து. தெம்மாங்கு தேன் சிந்த தென்னையும் வேர்க்கும் பூத்து. எதுகை மோனையில் கொலுசொலி சேர்ந்தது எப்படி. கவிதை மேட்டில் காலாறும் காற்றே செப்படி. பிரியத்தின் பித்து ஏன் தெளிய வேண்டும். பிய்த்து பிய்த்து போடு... விழும் பட்டன் எல்லாம் பேரன்பின் விதையாக ஆகட்டும். முற்றுப்புள்ளி எப்போதும் முத்தப்புள்ளி தானே நமக்கு. ஒன்றிலிருந்து ஒன்று என்று அதிலிருந்து அது என்று அதன் அடுத்தடுத்த நகர்வில் கவனி... நேர்கோட்டு நட்சத்திரங்கள் சில் அவுட் சீனில் சித்திரம் பூக்க காண்பாய்.

சிமிட்ட சிமிட்ட கொண்டாட்டம். விழுந்து எழுந்து எழுந்து விழுந்து என்ன ஒரு விளையாட்டு.... அலைபேசி அலைக்கடலுக்கு. அதன் நுட்ப பளிச்சிடல் வழியே புது புது நிறங்களின் தேசம் நிறப்பிரிகைகளாய் நிகழ்த்துக்கலை செய்கிறது. பின் தொடரும் நிழலுக்கு தான் வெளிச்சம் வேண்டும். உடன் இருக்கும் நிழலுக்கு அயர்ச்சி ஏது.

உவமைகளின் உருவம்... மலைகளின் நடுவே பாறையாய் பார்த்திருக்கும். அருகே செல். அதன் நடுவே சிறு துளிர்கள் சிலிர்த்திருக்கும். சிரி. பஞ்சுமிட்டாய் வாசத்தில் ஒரு பருவ தேசம் காட்டுகிறேன். ஒற்றையடியில்...

கத்தும் குயிலென வா. செங்காந்தள்
தோட்டத்தில் சிறு தெய்வமென பார்.
சிறுக சேர்ந்த சிறுவயது உண்டியலாய்
குலுங்குகிறேன். மலை விட்டு இறங்க
ஒரு மடி நெய். மணக்கும் ஓடையாய்
மனம் திறந்து பாய்கிறேன்.

இந்த நதியின் தடம் பற்றிய உன் விழியின்
இலைகளை ரசிக்கிறேன். கையளவு
ஓடையே கன்னம் இணுங்கி செல்.
போக்கு காட்டும் புருவ வளைவுகளை
மயில் கற்களில் வைத்திருக்கிறேன்.
மலரும் யுகத்தின் தூரங்களை கடக்க...
ஒரு டஜன் நீ வேண்டும்.

உன் ஒவ்வொரு கனவுக்கும் என்
புகைப்படங்களே சட்டங்கள். சட்டம்
மீறும் கனவுக்கு என் நிழல் படங்களை
காவலிடுகிறேன். தட்டு நிறைந்த
மெட்டுகளை கொட்டுகிறேன். மொட்டு
விட்டு முல்லை அவிழ்வது உன் பாடு.

புது வருடத்தின் முதல் எழுத்து இது.
பருக்களோடு பருவம் பூக்கிறது.
பறவையாக காலம் வாய்க்கிறது.

கண்ணாடி பார். கொஞ்சம் காதோரமும்
பார். நீல வண்ண மலைமுகடன் நீக்கமற
சித்திரம் திறப்பான். பூங்கொத்தின்
நவிழும் பனிக்குடை செய்திருந்தது. அதன்
நடுவே நானொரு நாட்டியம் தான் போ.
ஆச்சரியங்களின் குவியலுக்குள் தள்ளி
விட்டு தாளமிடுகிறேன். ஒரு பொக்கிஷ
புத்தாண்டு பரிசாக தலையாட்டி என்
வானம் சூடு.

—

கவிஜி

# சாதி வெறி

நாள் தோறும் உழைத்தான் அந்த
வேலையாள்-
மதிய உணவு உண்டான்•••

திண்ணையில் வைத்து தான்
பரிமாறப்பட்டது :
அவன் எழுந்து போன பின்
அந்த இடத்தை தண்ணீர் ஊற்றி
அலசினால் என் வீட்டு மூதாட்டி-
அவள் செய்கை புரியாது கேட்டேன்,
ஏன்? என்று•••

அவள் சொன்னாள் "அவன் உட்கார்ந்த
இடம் தீண்டதகாதது ஆதலால் தான்
என்று:
தீ பற்றி எரிந்தது என் மனது-
எங்கு தொடங்கியது இந்த வேற்றுமை?

கையும் காலும் ஒன்று போல் படைத்த
சதைப்பிண்டம் தானே நாம்
அனைவரும்;
சாதி மதம் எங்கு நுழைந்தது இதநுள்•••

சாதிகள் இல்லையென்று பேசும் பலர்
அதை பேச்சோடு
நிறுத்திக்கொள்வதேன்?
திரள வேண்டும் மக்கள் இதை எதிர்த்து -
பின் திருந்த வேண்டும் மக்கள் அதை
தொடர்ந்து;

ஏற்ற தாழ்வு இல்லா தேசம் வேண்டும்•••

பிறரை ஏறிமிதிக்க ஏங்கும் தேச மக்கள்
வேண்டாம்;
காற்றை மட்டும் கொண்ட மூச்சு
வேண்டும்•••

அதில் கலப்படம் இருக்குமெனில்
அதுவும் வேண்டாம்;
உயிர் போகும் தருணத்தில் உதவ ஆள்
வேண்டும்...

நான் அவன் சாதிக்காரன் என்பதற்காக
உதவ வந்தான் எனில் நிச்சயம் அதுவும்
வேண்டாம்;
பிறப்பில் உயர்வு தாழ்வு போதிக்கும்
மக்களோடு வாழ்வதை விட•••

பிறவி இன்றி போயிருந்தால்
களியுற்றிருப்பேன்:
சாதியம் இல்லா தேசம் வேண்டும்...
சக மனிதர்கள் மீது நேசம் வேண்டும்...

--
இவள்,
கவி,
(கவிதாயினி. பார்கவி.செ, M.E (PS).,)
வல்லூர், மன்னார்குடி.



# உன்னை பாராமல்...

உன் குரல் கேளாமல் என் காதுகள்
இரண்டும் செவிடாய் போனதோ...

உன்னிடம் பேசாமல் என் வாய் மௌனம்
கண்டு ஊமையானதோ...

உன் நினைவுகள் தொடுத்த வண்ணம் என்
இமைகளில் நாட்டியம் கொள்கிறது...

நீ இன்றி கான்பவை யாவும்
அர்த்தமற்று... வெட்டுர்ணவாக
தோன்றுகிறது கண்ணே...

நீ இன்றி வானம் மடந்து....
கடல் ஆர்ப்பரிப்பு அற்று..

தென்றல் அது அனலாய்...
இசை அது வெறும் சத்தமாய்...

ரசிக்கும் மனதற்று தடந்து நிற்கின்றது
கண்ணே...

உன் நினைவாக என் பேனா
என் பெயரை கையப்பம்யிட மறந்து
மறுத்து
உன் பெயரை கையெப்பம் இடுகிறது....

கண்ணே••• உன் மொழி கேளாமல்
இன்றிய நாள் ஒரு வெறும் நாளே.....

காதலுடன் நான்....

—

கவிபாரதி சதீஷ்,

# அதற்கேற்ப...

சுற்றி சுற்றியும்
வேறு சிந்தனைகளற்றும்
குழப்பமும்
கலக்கமும்
பயமும்
தீர்வு புலப்படா
உள்ளுக்குள்ளையே
வருத்தம் தொடர்ந்து
கொண்டிருக்கும்
சுயசிக்கலின் போது
ஆலயம் சென்றால்
இறையிடத்து
என் பிரச்சைனையை
தீர்த்து வை
என மானசீகமாய்
அருகில் யாரும் இல்லையெனில்
முணுமுணுத்து
பிரார்த்தனை

இல்லத்திலிருந்து
ஆலயம்
தரிசனம் முடித்த பின்
இல்லம்

சராசரியான நாட்களில்
என்றால்
இறையிடத்து பிரார்த்தனை
தனக்கு
குடும்பத்துக்கு
உறவுக்கு
தோழமைக்கு
அகிலத்துக்கு

தரிசனம் முடிந்த பின்
ஆலய அழகை ரசித்தல்
சிற்பிக்கு பாராட்டு
ஸ்தல புராணம் யோசிப்பு
நமக்கு முன்னை
எத்தனை எத்தனை
மனிதர்களின்
பிரார்த்தனைகள்
வேண்டுதல்கள்
கெஞ்சல்கள்
எதிர்பார்ப்பு நிறைவேறியதற்கும்
சிக்கல்கள் விடுவிப்புக்கும்
நன்றிகள்
எல்லாம் வல்ல இறைவன்
இங்கே கேட்டிருப்பார்
என்ற யோசிப்பு

இவை எல்லாம்
அந்த அந்த
மனநிலைக்கு ஏற்ப

---------------------------

## சேமிப்போம்...

பணத்தையும்
சொத்துக்களயும்
மட்டுமல்ல...

சந்தித்து
சாதித்த
சவால்களை...

நீருபித்த
திறமையை...

இழப்பில் இருந்து
மீண்டு எழுந்த நாட்களை...

உறவுகளிடத்தும்
நட்பிடத்தும்
கழித்த மகிழ்ச்சியான
தருணங்களை...

பின்னொரு நாளில்
இந்த நினைவுகள்
நம்பிக்கை கொள்ள
சந்தோசப்பட்டு
புத்துணர்ச்சிக்கொள்ள
உதவும்

---------------------------

## வெவ்வேறான அளவீடுகளில்...

வெற்றிக்கான
சந்தோசமும்
இழப்புக்கான
சோகமும் ஆன
உணர்வுகள்
எல்லோருக்கும்
ஒன்று என்றாலும்
அதற்கான
அளவீடுகள் ஒன்றா
என்றால் இல்லை

அவரவர் கொடுக்கின்ற
முக்கியத்துவத்தாலும்
பெற்ற அனுபவத்தின்
விளைவாய்
அடுத்தவற்றுக்கான
யோசிப்பினாலும்
வேறுபடுகிறது

ஏன்
தன்னுடைய
அளவீடுகளே
முன்னருக்கும்
தற்போதையவற்றுக்கும்
வேறுபடுகிறது

---------------------------

## அப்ப...

முக்கியத்துவமான
பணியை
கடமை உணர்ச்சியுடன்
உளப்பூர்வமாய்
செய்கிற போது
அதுக்குக்குள்ளே
பணி நேரம்
முடிந்ததா

உறவின்
நட்பின்
சுவராஸ்ய பேச்சில்
இவ்வளவு நேரமா
பேசியிருக்கோம்
நேரம் போனதே
தெரியவில்லை

பயண நேரத்திற்கு
வெகு முன்னதாய் வந்து

விட்டு வாகனம்
இன்னும் வரவில்லை
நேரமே போக மாட்டேங்கிறது

முடிவு இப்போது தான்
என்று தெரிந்த பின்பும்
இடைப்பட்ட காலத்தில்
வேறு எதற்கும்
சிந்தனை செல்ல மறுப்பதால்
காலா காலத்தில்
சொன்னா நல்லா இருக்கும்

என மனித எண்ண ஓட்டங்கள்

நம் விருப்பத்துக்கு
நீளவும்
சுருக்கிக் கொள்வதையும்
நாளின்
இருபத்தி நாலு மணி நேரம்
செய்யப்போவதில்லை
என்ற புத்தியின்
வார்த்தையை
புறந்தள்ளி...

----------------------------

## அப்பவும், இப்பவும்...

அப்ப
பட்டிமன்ற தீர்ப்பில்
நாம் விரும்புகின்ற
தீர்ப்பு வருமா
என எதிர்பார்ப்பு

இப்ப
தீர்ப்பு தவிர்த்து
இரு தரப்பு வாதங்களை
உன்னித்தல்

அப்ப
செயலுக்கு முடிவு
சாதகமாகும் என்ற
ஒற்றை எண்ணம்

இப்ப
சாதகமாவில்லை எனில்
அடுத்தது பற்றிய
யோசனை
முடிவுக்கு முன்னே

அப்ப
நமக்கானவர்கள்
விருப்பமில்லாத
பேச்சுக்கும்
செயலுக்கும்
அதைப்பற்றியே
பேச்சு

இப்ப
அது ஒரு புறம்
இருக்கட்டும்
அதற்காக
உறவை , நட்பை
துறக்கலாமா
என்ற எண்ணம்

அப்ப
ஒரு வெற்றிக்கு
ஒரு அங்கீகாரத்துக்கு
அறிந்தவர்களிடத்தில் எல்லாம் சொல்லி
அலட்டல்

இப்ப

அலட்டல் இல்லாமால்
உள்ளுக்குள்ளேயே
உவகை

அப்ப
ஒரு தோல்விக்கு
ஒரு இழப்புக்கு
அறிந்தவர்களிடத்தில் எல்லாம் புலம்பல்

இப்ப
தனிமையிலே மட்டும்
வருத்தப்படுதல்

அப்ப
கடவுளிடத்து
எந்த சிக்கல் இல்லாத
வாழ்க்கையை
கொடு

இப்ப
சிக்கல்களும்
சவால்களும்
வந்தாலும்
அதை எதிர் கொள்ளும்
ஆற்றலை
என்னுடைய
உழைப்போடு
சேர்த்து வை
என பிரார்த்தனை

காரணங்களாய்
இடைப்பட்ட காலத்தில்
மேம்பட்ட யோசனை
செயல்திறன்
பெற்ற அனுபவம்
அனுபவத்தால்
கிடைத்த மனமுதிர்ச்சி

---------------------------

## ஒரு முறையேனும்...

நாம் எதிர்பார்த்த
பிறரின்
பேச்சுக்கு
செயலுக்கு
இலக்குக்கு
முடிவுக்கு

அவர்களின்
தகுதியையும்
திறமையையும்
ஆத்மார்த்தையும்
மட்டுமில்லாமால்

தற்போதைய சூழ்நிலை
மனநிலை
நெருக்கடிகள்
சவால்கள்
பிற அவசிய பணிகள்

இவற்றையும்
சேர்த்து
ஒரு முறை
யோசித்தால்
உதவினால்
ஊக்கப்படுத்தினால்

ஏமாற்றங்களும்
கோபமும்
மனக்கசப்பும்
தவிர்க்கப்படும்

பாராட்டு

சோக துக்க
தருணத்தில்
மற்றவரின்
வேதனையை
உணர மறுக்கும் மனம்

இல்லை இல்லை
அவரவர் கச்டங்கள்
அவரவர்க்கு வேதனை தான்

----------------------------

## எனக்கும் உங்களுக்கும்...

நிறைய ஆசைப்பட்டு
எண்ணமாக்கி
இலக்கு பிறந்து
துல்லிய திட்டமிட்டு
உழைப்பும்
திறமையும்
கவனக்குவிப்புமாய்
செயல் முடித்த பின்
சறுக்கையில்

என் மனதினில்
முதலிருந்தா
பத்தாததோ
திரும்ப தோற்றால்
இப்படியே போனால்
கிடைக்கவே கிடைக்காதோ
ஏன் இப்படி
என்ன தான் செய்வது

----------------------------

## இரு பார்வைகள்...

நிறைய கச்டங்கள்
தொடர்ந்தால்
பிரச்சனை தீர போகிறது

இல்லை இல்லை
நமக்கு நாமே
சமாதானம் செய்து கொள்ளும்
மனக்கணக்கு

நிறைய செய்திகளோடு
சுவராஸ்ய பேச்சை கேட்டு
விசயமானவர்

இல்லை இல்லை
படித்ததை கேட்டதை
வார்த்தைகளால்
பட்டுவாடா செய்யும்
தபால்காரர்

தன் வெற்றியிலும்
சந்தோசத்திலும்
பிறரின் ஆக்கபூர்வ
செயல்பாடு
மதிக்கப்படாது

இல்லை இல்லை
தன்னைப்போலவே
உழைப்பாலும்
திறமையாலும்
செய்த செயல் என்பதால்

செவி கொடுத்தும்
பார்த்து மட்டும்
கொண்டு இருக்கும்
உங்களிடமிருந்து

யாருக்கு தான் இது
நடக்கவில்லை?

---------------------------

## நமக்கு நாமே...

வெற்றியின்
சந்தோசத்தை
இப்போதே அனுபவி

சோகமும்
தோல்வியுமா
இந்த முறை தான்
இது நிரந்தரமில்லை

அவமானமும்
கடும் வசை சொற்களுமா
எப்போதாவது தான்
வாழ்க்கை முழுவதும் இல்லை

முடிவு எடுப்பதில்
குழப்பமா
இடைவெளி விட்டு
மீண்டு யோசி
புதிய தீர்வு கிடைக்கும்

நெருங்கிய மரணமா
அழுது தீர்த்து விட்டு
அடுத்தவற்றுக்கு
தயாராகத்தான் வேண்டும்

என்ற
நிலையாமை
வாழ்க்கை தத்துவங்கள்

பிறருக்கு சொல்லவும்
குழுவாய் இருக்கையில்
பேசவும் முடிகிற
நம்மால்

அது நிகழும் கணத்தில்
நமக்கு நாமே
சொல்லிக்கொள்ள
முடிகிறதா?

பெரும்பாலும் இல்லை

---------------------------

## பல விதமாய்...

விரும்பாத
ஏற்று கொள்ள இயலா
பேச்சுக்கும்
செயலுக்கும்

வெளிப்படுத்துகின்ற
கோபம்

கழுத்து நரம்புகள்
புடைக்க கத்துதல்

பல்லைக்கடித்து
தாக்க முனைதல்

மனதுக்குள் வைத்து

ஆளாய் மதிக்காமல்
புறக்கணித்தல்

பிறரிடம் அவருக்கு
பிடிக்காத வகையில்
சொல்லி கோபமடைய செய்தல்

என எத்தனை வகை?...

---------------------------

## அதை சொல்வதற்கும்.

எண்ணங்களும்
பேச்சும்
செயல்பாடும்
நிலைப்பாடும்
நமக்கு சரியாய் பட்டால்
போதும்
பிறர் என்ன சொல்கிறார்
என்பது பற்றி
கவலை இல்லை

இப்படி சொல்வதற்கும்

குறைந்த பட்சமாய்
ஒரு
வெற்றி
பாராட்டு
யோசனை ஏற்பு
காலத்தே செய்த உதவி
சரியான முன் யோசனை
மனித நேய உதவி
தேவை.

இல்லையெனில்

வெறும்
வார்த்தைகளாய் தான்
பார்க்கப்படும்

---------------------------

## பதிலற்ற பொழுதுகளில்...

முடிவுக்கான
ஆலோசனைக்கான
உதவி கேட்புக்கான
பிறருக்கான வாய்ப்புக்கான
பதிலை
எதிர்மனிதரிடம்
எதிர்பார்த்திருக்கையில்

பதிலற்ற அமைதியும்
முக மொழியில்
அறிய முடியாமையும்
என்றால்

சரி என்கிறாரா
இல்லை என்பதை
வார்த்தைகள் இல்லாமல்
சொல்கிறாரா
யோசிக்கிறாரா
வேறு யாரிடமும்
ஆலோசிக்கப்போகிறாரா
முடியாது என்பதை
சொல்ல சங்கடப்படுகிறாரா

என நிறைய
கேள்விகள்
மனதில்...

---------------------------

## என்ன செய்ய?...

நாள் முழுதும்
யோசித்து
செயல்பட்ட பிறகு

தூக்க இரவுகளில்
உடலுக்கும்
உனக்கும்
ஓய்வு கொடு

நாளைய எங்கும் போய் விடாது
நாளைய பொழுதை
நிகழும் கணத்தில்
சந்திக்கலாம்

என வகை வகையாய்
மனது சொன்னாலும்

புத்தி கேட்க மறுத்து
யோசித்து யோசித்து

உடலையையும்
மூளையையும்
களைப்படைய
செய்கிறதே

என்ன செய்ய?...

-----------------------------

## பேரை சொல்லவா?...

உலகத்து நல்ல விசயங்களும்
பிறரை பாராட்டும்
நிகழ்வுகளும்
பகிரப்பட்டால்
அது 'சந்தோச மன நிலை'

நாட்டின் அவலங்களும்
பிறரை குற்றம் சாட்டுதலும்
அரங்கேறினால்
அது 'வருத்த மன நிலை'

சந்தோசமும்
நம்பிக்கையும்
சொல்லப்பட்டால்
அது 'வெற்றியின் வாசிப்பு'

புலம்பல்களும்
இயலாத தன்மையையும்
சொல்லப்பட்டால்
அது 'இழந்த மன நிலை'...

—

*A.S. சுந்தரராஜன்,*
மானாமதுரை,
கைப்பேசி: 9994920236



# பிழைகள் இருக்கலாம் அதில் உங்கள் பிள்ளைகளாகிய நாங்கள் இருப்போம்.

விலை மதிப்பில்லாத தங்கள் நேரத்தை ஒதுக்கி இந்த திறவுகோல் இதழை படித்த அனைவருக்கும் எங்கள் அணியின் சார்பில் நன்றியை உரித்தாக்குகிறோம்.

மன்னார்குடியில் இருந்து வெளியிடப்படும் முதல் மாத இதழ் இது. உள்ளூரில் இருக்கும் படைப்பாளிகளை அடையாளம் கண்டு அவர்களின் படைப்புகளை வெளி உலகிற்கு கொண்டு வரும் வண்ணத்தில் துவங்கிய மாத இதழ்.

நீங்கள் படித்த படைப்புகளில் ஏதும் பிழைகள் அல்லது முரண்பாடுகள் இருப்பின் உங்கள் விமர்சனங்களை முன் வையுங்கள். எதிர்காலத்தில் அதை கருத்தில் ஒண்டு இன்னும் வலுவாக செயல்படுத்துவதற்கான முயற்சிகளை மேற்கொள்கிறோம்.

நீங்கள் உங்கள் விமர்சனங்களை அனுப்ப...
மின்னஞ்சல்: thiravukolfdbk@gmail.com
பகிரி: +91 8220567322

படைப்பாளர்கள் தங்களின் படைப்புகள் - சிறுகதை, கட்டுரை, கவிதை, ஓவியம் என எங்கள் இதழில் இடம்பெற செய்ய...
மின்னஞ்சல்: thiravukolsubmit@gmail.com
பகிரி: +91 8220567322

தொடர்ந்து பகிரி வழியில் தங்கள் கைபேசிக்கே மின்னிதழைப் பெற...
பகிரி: +91 8220567322

இணையம் மூலம் தரவிறக்கம் செய்ய...

அடுத்த இதழில் இன்னும் சிறப்பான படைப்புகளுடன் உங்களை சந்திக்கிறோம்.

—

கி. மாணிக்கம்,
திறவுகோல் ஆசிரியர், குழு.